கொள்ளலாம் என்று இருக்கிறது. 3—3—1972-ம் ஆண்டு ஆணை வழங் கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக நீக்கப்பட்டிருந்தால் மறுபடியும் சேர்த்துககொள்ள வழி ஏற்படும் என்று கருதுகிறேன். ஏதாவது சங்கடம் இருந்தால், மறு விளக்கங்கள் பெறலாம்.

திரு கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்று இருந்தாலும், உத்தரவு நடைவிலே சென்றுவிட்ட காரணத்தாலே, அவர்கள் பணி வேலையிழந்திருக்கின்றார்கள். அவர்களுடைய பணிப் பாதுகாப்பு நியாயமானதுதான். எனவே அந்த அடிப்படையில் அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி அதனை கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கலாம். ஆனால் அதற்கிடையிலே வேறு யாரையாவது போட்டிருப்பார்களானால் அவர்களைக் கொண்டுவந்து வைத்து, பின் இவர்களை அனுப்ப வேண்டி வரும்.

3. தகவல் கோரல்.

மாநில முதலமைச்சர்கள் மகாநாட்டு முடிவுகள் குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் மாநில முதலமைச்சர்கள் மகாநாடு டெல்லியிலே நடைபெற்றிருக்கிறது. அந்த மகாநாட்டின் முடிவுகள் இன்றைய தினம் பத்திரிகைகள் மூலமாகத் தெரியவருகின்றன. மகாநாட்டிலே கோதுமை, அரிசி சம்பந்தமான பல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசு அரிசியை தாய்லாந்து, பர்மாவிலே இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தது. மத்திய அரசைப் பொறுத்த வரையிலே, கோதுமைதான் இறக்குமதி செய்யப்படும். இந்த அரிசி இறக்குமதி செய்யப்படாது என்று சொன்னதாக அந்தப் பத்திரிகைச் செய்திகள் மூலம் நான் அறிந்தேன். இந்த மகாநாட்டின் முடிவுகளைப் பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் இதற்கு முன்னாலேகூட ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி, இந்த அவையிலே விவாதம் நடந்து கொண்டிருந்த போது, ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, டெல்லி போய் வந்த முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இங்கே ஒரு விளக்கம் தந்திருந் தார்கள். அது போன்று ஒரு நல்ல விளக்கத்தை இங்கே தந்தால நல்லது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1975 மார்ச் 10

(பிற்பகல் 4–30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மாநாட்டிற்கு டெல்லிக்குச் சென்றுள்ள வேளாண்மைத் துறை அமைச்சர் வந்ததும் அதுபற்றி விவரங்களை அவர்களிடத்திலே கேட்டுத் தெரிந்து அவைக்கு அறிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. 1975–76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே 1975–76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வைத்ததையொட்டி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் என்னுடைய கருத்துக்களைக்கூற ஆசைப்படுகின்றேன். பொதுவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை ஆரம்பிக்கின்ற நேரத்திலே அவருக்கேயுரிய மிக சாதுரியமான முறையிலே அந்த அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை நாமெல்லாம் அறிந்திருக்கின்றோம். பொதுவாக விலைவாசியினுடைய நிலையை அவர் குறிப்பிடுகின்ற நேரத்திலே கட்டுக்கு அடங்காத நிலையிலே விலைவாசி ஏறிக்கொண்டு போகிறது என்பதையும், அதை எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்குத்தான் நாட்டு மக்கள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தங்களுடைய நிதி நிலை அறிக்கையிலே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்திலே அதைப் போக்குவதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏதாவது வழி வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்று திரும்பத் திரும்பப் பார்க்கின்ற எனக்கு ஏதும் இல்லையென்ற நிலைமைதான் தென்படுகிறதே தவிர, அதற்கு மாறாக உலகம் பூராவிலுமே விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று ஒரு பக்கத்திலே சமாதானத்தைக் கூறிவிட்டு அதை அடுத்து இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசு கடைப்பிடிக்கக் கூடிய பொருளாதாரக் கொள்கைகள்தான் என்பதை திரும்பத் திரும்ப தங்களுடைய உரையிலே வலியுறுத்தியிருக்கின்றார்கள். மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கைகள் இந்த நாட்டினுடைய விலைவாசிகள் ஏறுவதற்கு ஒரு வகையிலே காரணம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது. நான் மத்திய அரசு மட்டுமே தான் விலைவாசி உயர்வுக்குக் காரணமா என்று பார்க்கின்ற நேரத்திலே அது மட்டும் காரணமல்ல, மாநில அரசினுடைய நிர்வாகத் திறமையின்மையும் அதற்குக் காரணம் என்பதை என்னால் காண முடிகிறது. பொதுவாக இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். இந்த ஆண்டிலே வறட்சி ஏற்பட்டது விலைவாசிகள் ஏறியதற்கு ஒரு காரணம் என்பதோடு விளைபொருளும் உற்பத்தி குறைந்து விட்டதும் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், கடந்த ஆண்டு அரசு கொடுத்துள்ள புள்ளி விவரத்தைப் பார்க்கின்ற நேரத்திலே, அரிசி 56 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், தினை வகைகள் 15 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், பயறு வகைகள் 2 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், கடந்த ஆண்டில் நிலவரத்தை இங்கே அரசு கொடுத்திருக்கிற **புள்ளிவிவரத்தில் காண**